கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 09.01.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் பவானிசாகரில் பொங்கல் விழா – 2025

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பொங்கல் விழா 09.01.2025, வியாழக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந.சக்திவேல் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இந்த நிகழ்வில் முனைவர் எம்.கே.கலாராணி, இயக்குனர், பயிர் மேலாண்மை இயக்குனரகம், முனைவர் இர. உமாராணி, இயக்குனர், விதை மையம், திருமதி. மீ.தமிழ்ச்செல்வி, வேளாண்மை இணை இயக்குனர், ஈரோடு மாவட்டம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் தொகுத்த "எண்ணெய் வித்து பயிர் இரகங்களும் அதன் சாகுபடி தொழில் நுட்பங்களும்" எனும் நூலை பொங்கல் விழாவை முன்னிட்டு வெளியிட்டு, விழா பேருரை வழங்கி பொங்கல் விழாவையொட்டி நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். பொங்கல் விழாவின் ஒரு அங்கமாக மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சியும், பண்ணைத் தொழிலாளர்களின் கும்மியாட்டமும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மஞ்சள் ஆராய்ச்சி மையத்தின் இணை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.கவிதா, வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள், மாணவர்கள், ஊழியர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பேராசிரியர். முனைவர் கு.மலர்கொடி அவர்களின் நன்றியுரையுடன் பொங்கல் விழா இனிதே நிறைவுபெற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**